முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

வார இதழ்

முரசு 5 | 12–9–58 | வெள்ளி | ஒலி 19

பாரதி - சின்னப் பயல்!

நீட்டோலை

அன்புள்ள பொன்முடி!

"விண்ணிலிரவிதனை விற்றுவிட்
டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம்
போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?"

●

"மண்ணிலின்பங்களை விரும்பிச்
சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச்
சித்திரம் வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ?"

—இப்படி விடுதலை முரசு கொட்டிய மாகவி பாரதியின் திருநாளைத் தமிழகம் பூரிப்போடு கொண்டாடியது. பாரதியின் பெருமையை பல் வகையினும் எடுத்தோதி மகிழ்ந்தது எந்த ஆண்டும் போலவே இந்த ஆண்டும்!

பாரதி உயிரோடு உலவிய நேரத்தில் அவரைக் கவிஞர் வரிசையில் சேர்ப்பதற்கு மறுத்தவர்கள் எல்லாம் அவர் வறுமையால் வாடிச் சோர்ந்து உலர்ந்து உயிர்விட்ட பிறகு அவர் பெயரால மணிமண்டபம கட்டித் தங்கள் பெயருக்கிருந்த களங்கத்தைக் கழுவிக் கொண்டார்கள். தாங்கள் செய்த "பாபத்"த்திற்குப் பரிகாரம் தேடிக் கொண்டார்கள். மண்டபம் கட்டினலும் கட்டாவிட்டாலும், விழா நடத்தினலும் நடத்தாது விட்டாலும், பாரதி தமிழறிந்தவாகள் உள்ளங்களில் அழகான மண்டபங்களை அமைத்துக் கொண்டு கம்பீரமாக அமர்ந்து கவிதை மழை கொட்டிக் கொண்டுதானிருப்பார். அவரையும் அவரது வேகமான கவிதை வரிகளையும் யாரும் மறந்துவிட இயலாது.

பாரதி, அடிமையாய்க்கிடந்த இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்காக மட்டும் குரல் எழுப்பியவர் அல்ல!

காடுமேடு கடந்து, காட்டாற்றில் நீந்தி, குகையினில் நுழைந்து, புகையினை விலக்கிப் புகுந்தால்தான் தமிழன்னையின் எழிற்கோலம் காணலாம் என்றிருந்த நிலையை மாற்றி, தமிழன்னையைக் கண்டு மகிழ்வதற்கு எளிய நடை யென்னும் பட்டு விரித்த பாதையைக் காட்டிய பெருமை பாரதியைத்தான் சாரும்.

பழமை எனும் தீயால் தமிழ்ச் சமுதாயத்தைச் சுட்டெரிக்க முயன்ற மரபினிலே பிறந்தவர் தான் பாரதி; ஆனல், தான் பிறந்த சமுதாயத்தின் முதுகினிலே ஓங்கிக் குத்தி "நெஞ்சு பொறுக்குதில்லை இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால்!" என இடித்துரைத்து, "ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்!" என விளித்து விளக்க முரைத்துச் சமுதாயத் துறையிலும் புரட்சி செய்தவர் பாரதியார்.

"பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே!" என்று ஓங்கிய மூச்சுடன் உரக்கக் கூவிய இலட்சியக் கவிஞர் அவர்.

அவரது பாடல்களை தொகுத்துத் தந்தவர்கள் வரிசைப்பட அமைத்துத் தராமல், எந்தெந்தக் காலத்தில் எவை எவைகளை எழுதினர் என்ற உண்மைக் குறிப்புகளைத் தராமல், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தூவி, அவரது புரட்சிக் கருத்துக்களுக்குத் திரையிட முயன்றிருக்கிறார்கள்.

பாரதியின் பாடல்களில் சில பிற்போக்குக் கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்குவது போலக் காணப்படும். அவைகள் எல்லாம் ஆரம்பக் காலத்தில் எழுதப்பட்டவை. புரட்சியின் வடிவமாக நின்றுகொண்டு பாரதி முழங்கியுள்ள பாடல்களை முன்வைத்து, இடையிடையே தமக்குச் சாதகமானவற்றை இணைத்துக் கொண்டு பாரதியை ஒரு குழப்பமான நிலையில் கொண்டு வந்து நிறுத்தியுள்ள குற்றம் பிற்போக்குப் பரம்பரையினரைச் சேர்ந்ததேயாகும். அது பாரதியின் குற்றமல்ல;

உதாரணமாக ஒரு பாட்டு:

"வருக செல்வ! வாழ்கமன் நீயே!
வடமேற் றிசைக்கண் மாபெருந்
தொலையினோர்
பொற்சிறு தீவகப் புரவலன்
பயந்த
நற்றவப் புதல்வ! நல்வர
வுனதே!
மற்றுன் நாட்டினோர் வந்ததன்
பின்னர்,
அகத்தினில் சிலபண் ஆறுதல்
எய்தின.
போர்த்தொகை அடங்கி என்
ஏழைப் புத்திரர்
அமைதி பெற்றுய்வ ராயினர்."

இது, வேல்ஸ் இளவரசரை வரவேற்று அவர் பாடிய பாட்டு. வெள்ளைக்கார இளவரசனை வரவேற்றிடும் இந்தப் பாடலை, இந்தியத் துணைக் கண்ட விடுதலை குறித்து அவர் பாடியுள்ள வீராவேச மிகுந்த சுதந்திரப் பாடல்களுக்குப் பிறகு இணைத்து அவரது விடுதலை உள்ளத்திற்குச் சிறிது தாழ்வு கற்பித்துள்ளனர்.

அவர் வேல்ஸ் இளவரசனை வரவேற்றுப் பாடினர் என்பது உண்மைதான். ஆனல் காலம் எத்தகையது? விடுதலை இயக்கமாக இருந்த காங்கிரஸ்கூட ஒரு காலத்தில் வெள்ளைக்காரர்களுக்கு விசுவாசமுள்ள ஊழியர்களாக இருப்போம் என்று தீர்மானம் போட்ட கட்சிதான்! காலம் மாறியது — கட்சியின் கொள்கையிலும் தீவிரம், மாற்றம் ஏற்பட்டது. பாரதியின் பாடல்களும் அத்தகைய மாற்றத்தைத்தான் அறிவிக்கின்றன.



உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன் நண்பா—

புரட்சிக் கவிஞரென இன்று பாராட்டப்படும் புதுவை திரு பாரதிதாசன் அவர்கள் ஆரம்பத்தில், 'சுப்பிரமணியர் துதியமுது' என்ற நூலை எழுதி வெளியிட்டவர்தான்.

ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு பாரதிதாசனின் புரட்சிக் கவிதைகளுக்கிடையே சுப்பிரமணியர் துதியமுது பாடல்களையும் கதர் கைராட்டினப் பாடல்களையும் இணைத்து நூலை வெளியிட்டால் பாரதியைப் போலவே பாரதிதாசனும் குழப்ப நிலையிலேதான் வைக்கப் படுவார்.

அப்படித்தான் இன்று பாரதியின் நிலை அமைந்துவிட்டது. காலக் கிரமப்படி வரிசைப் படுத்தி பாரதியின் பாடல்கள் வெளியிடப் பட்டிருக்குமேயானல் கவிஞரின் வளர்ச்சியும்—சமுதாய வளர்ச்சியும்—நாட்டு வளர்ச்சியும் — படிப்படியாக மேலோங்கி யிருப்பதை நாம் உணர்ந்திருக்கக் கூடும்.

பாரதியின் வளர்ந்த உள்ளத்தின் வழி நின்று நாட்டையும் சமுதாயத்தையும் காண மறுப்பவர்கள் அவரது ஆரம்பகாலக் கவிதைகளின் நிழலிலே நின்று "ஓம் சத்தி!" "ஓம் சத்தி!" என்று ஓங்காரக் கூச்சல் போட்டு என்ன பயன்?

"பாரதி வாழ்க!" எனக் கூவுகிறார்கள். சென்னையிலே— எட்டயபுரத்திலே — தமிழகத்தின் பல பகுதிகளிலே பாரதியின் பாடலை இனிய மெட்டுக்களில் பாடிக் களிக்கிறார்கள். மக்கள் வெள்ளம்போல் கூடி நின்று "பாரதியின் புகழ் வளர்க!" என ஒலிக்கிறார்கள். அறிவுரை கூற அமைச்சர்கள் —ஆளவந்தார்கள்—பெரிய மனிதர்கள்—கலை மேதைகள் அனைவரும் வருகிறார்கள்.

[தொடர்ச்சி பக்கம்—8]

ஆரியர்களும் சாதிப்பிரிவினையும் 5

அன்புள்ள மாதவி,

இமய முதல் குமரிவரை திராவிட மக்கள் உன்னதமான நாகரிகச் சிறப்போடு வாழ்ந்திருந்ததை முன்னொரு கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். மொகஞ்சதாரோவும், ஹாரப்பாவும், ஆதிச்சநல்லூரும் அப்பழங்குடி மக்களின் வாழ்க்கையை அழியாதபடி வரலாற்றிலே பொறித்துவிட்டன. சிந்து சமவெளியில் அன்று சிறந்து விளங்கிய நாகரிகம் நீடிக்கவில்லை. கால வெள்ளத்தாலோ அல்லது வேற்று மக்களின் படையெடுப்பாலோ அல்லது நிலையற்று ஓடிய சிந்துநதியின் சீற்றத்தாலோ அழிந்து போயிற்று. அவ்வாறு அழிந்து போன நகரங்களே இப்போது தோண்டி எடுக்கப்பட்டு வரலாற்றின் காட்சிப் பொருட்களாக்கிவிட்டன. செழிப்பான சிந்துநதிப் பிரதேசமும் ஒரு காலத்தில் பாலையாகத்தான் இருந்திருக்கவேண்டும். அப்பாலையில் வீசிய புயலோ, அன்றி சிந்துநதி திசை திரும்பியதால் கரையுடைத்துப் பெருக்கெடுத்த வெள்ளமோ அந்நகரங்களை மண்மேடாக்கியிருக்க வேண்டும். தோண்டியெடுக்கப்பட்ட நகரங்களில் படிப்படியாக மென்மேலும் கட்டப்பட்டுள்ள சுவர்களே இதற்குச் சான்றாகும். கி. மு. 1500 ஆண்டுகளுக்கு முன் மத்திய ஆசியாவிலிருந்து கிளம்பிய நாடோடி இனமான ஆரிய இனம் மேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியத் துணைக் கண்டத்தில் புகுந்தபோது, உயர்ந்த நாகரிகத்தைத் தாங்கி நின்ற இந்நகரங்களை அழித்திருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடம் உண்டு. சிந்து சமவெளி நாகரிக காலத்திற்குப் பின் சுமார் ஆயிரம் ஆண்டுகள்வரை ஒழுங்கான வரலாறு இல்லை.

கருங்கடலிலிருந்து காஸ்பியன் கடல்வரை — மத்திய ஆசியாவில் — வாழ்ந்ததாகக் கருதப்படும் இனம் ஆரிய இனம். நிலையாக வாழ்ந்து பயிர்த் தொழில் போன்ற தொழில்களை மேற்கொள்ளாமல் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்த இனம் ஆரிய இனம். மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்ட இந்த இனம் ஐரோப்பா, மொஸபடோமியா, ஆஃப்ரிகா, இந்தியா ஆகிய பல பிரதேசங்களிலும் சென்று குடியேறியது உனக்குத்தான் தெரியுமே! ஜெர்மன் சர்வாதிகாரியாக இருந்து மாண்டுபோன ஹிட்லர்கூட ஜெர்மானியர் அசல் ஆரிய இனமென்றும், அவர்களே ஆண்டிடப் பிறந்த உயர்ந்த இனம் என்றும், ஆகவே உலக ஆதிக்கம் அவர்களது உரிமையென்றும் கூறி, மாபெரும் போர் தொடுத்து உலகத்தையே சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாக்கியகதை! அந்த இனவெறிக் கொள்கை— தம்மினமே ஆளப் பிறந்த இனம்; பிற இனங்களெல்லாம் அடிமை ஊழியம் செய்யவே இருக்கின்றன என்ற கோட்பாடு உலகில் என்னென்ன கொடுமைகளையெல்லாம் தோற்றுவித்தது; எத்தனை பயங்கர விளைவுகளை உண்டாக்கியது!

மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்ட ஆரியர்களில் ஒரு பிரிவினர் சிந்து சமவெளியிலும் வந்து குடியேறினர். பால் கறக்கப் பசுக்களும், வயல்களை உழவும் வண்டிகளை இழுக்கவும் எருதுகளும் வைத்திருந்தனர். கால்நடைகளே அவர்களுடைய சொத்தாக இருந்தது. ஒவ்வொருவருடைய அந்தஸ்தும் அவன் வைத்திருந்த கால்நடைகளைக் கொண்டே மதிப்பிடப்பட்டது. குறிப்பாக, பசுக்கள் தெய்வாம்சம் பொருந்தியவையாகக் கருதப்படடுவந்தன. இந்தக் கொள்கைதான் பிற்காலத்தில் இந்து மதத்தில் பசுவதை பெரிய பாவம் என்ற உணர்வினை உண்டாக்கிற்று. இப்பொழுதுகூடப் பசுவதை செய்வதும் பசுக்களைக் கொல்லுவதும் தடுக்கப்படவேண்டிய அவசியம்பற்றி அடிக்கடி பாராளுமன்றங்களில் பேசிக்கொள்ளப்படுவதைப் படித்திருப்பாயே! இந்தப் பசுவின் பிரச்சினையே இந்து—முஸ்லிம் கலவரங்களுக்கு இந்நாட்டில் எவ்வளவோ முறை அடிகோலி இருக்கின்றது!

ஆரியர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி வாழ்ந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் இருந்தான். அந்தத் தலைவன் பெரும்பாலும் மதகுருவாக இருந்தான். இந்த மதகுருக்களே பழைய காலங்களில் ரிஷிகள் என்று அழைக்கப்பட்டிருக்கவேண்டும். விஸ்வாமித்திர ரிஷியைத் தலைவராகக் கொண்ட ஆரியக் கூட்டத்திற்கும், வசிஷ்ட ரிஷியைத் தலைவராகக் கொண்ட ஆரியக் கூட்டத்திற்குமிடையே நடந்த பெரும் போரைப்பற்றி ஆரியர்களின் ஆதி வேதமான 'ரிக்' வேதம் குறிப்பிடுகிறது. இந்த ஆரிய ரிஷிகள் ஆலோசகர்களாகவும் தலைவர்களாகவும் மட்டும் இருந்து தத்தம் கூட்டங்களுக்கு வழிகாட்டவில்லை. நல்ல போர்த் திறம் படைத்தவர்களாகவும் இருந்தனர். துரோணர் என்ற ஆரிய ரிஷி துரியோதனாதியர்களுக்கும் பாண்டவர்களுக்கும் வில் வித்தைகள் கற்றுத் தந்தவராகப் பாரதம் குறிப்பிடுகிறது. இப்பொழுது வாழும் பார்ப்பனர்களும் ரிஷிகளின் பெயராலேயே தங்களுடைய கேந்திரங்களைக் கூறிக்கொள்வதும் நீ அறிந்ததே!

பாடுபடுவதிலும் பாடல்கள் புனைவதிலும் ஆரியருக்குப் பெரும் விருப்பம் இருந்தது. தங்களுடைய தலைவர்கள்மீது பாடல்கள் புனைந்து விசேஷ காலங்களில் அவற்றைப் பாடுவது அவர்களுடைய வழக்கம். மத விழாக்களின்போது அவ்விழாக்களின் சிறப்பு பற்றி அவைகளுக்கெனவே புனையப்பட்ட பாடல்களை பக்தி சிரத்தையோடு பாடுவார்கள். இந்தத் தோத்திரப் பாடல்களின் தொகுப்பே 'ரிக்' வேதமென்று பின்னால் அழைக்கப்பட்டது. விழாக் காலங்களில் சோமபானம் போன்ற மது வகைகளை அருந்தும் பழக்கத்தையும் ஆரியர்கள் மேற்கொண்டிருந்தனர்.

ஆரியர்கள் மேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவில் நுழைந்தபொழுது சிறப்புப் பெற்றதொரு நாகரிகம் இங்கிருப்பதைக் கண்டார்கள். சிந்து சமவெளியில் வாழ்ந்த திராவிடர்களைப் போரிட்டு வென்றார்கள். முதலில் சிந்து சமவெளியில் குடியேறிய ஆரியர்கள் மேன்மேலும் தம் இனத்தவர் இந்தியாவில் வந்து சேரவே, இந்த சமவெளியிலிருந்து கங்கைக் கரையிலும், பின்னர் அதற்கு தெற்கேயும் சென்று குடியேறினர். தங்களால் தோற்கடிக்கப்பட்ட திராவிடர்களைக் 'கீழானவர்கள்' அல்லது 'அடிமைகள்' என்ற பொருளில் 'தஸ்யுக்கள்' என அழைத்தனர். சிறப்பான நாகரிகத்தோடு வாழ்ந்த ஒரு இனத்தை ஆரியர்கள் 'கீழானவர்கள்' என்றழைக்க என்ன காரணம் என்று நீ கேட்கக் கூடும். ஆரியர்கள் இடி, மின்னல், சூரியன், காற்று, நீர் போன்றவைகளையெல்லாம் கடவுளாகக்கொண்டு வழிபட்டனர். இப்படிப்பட்ட தெய்வ வழிபாட்டில் திராவிடர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை. அதோடு 'தோற்றவர்கள் 'கீழானவர்கள்' என அவர்கள் எண்ணியிருக்கக் கூடும். எனக்குக்கூட ஒரு சந்தேகம்; உயர்ந்த நாகரிகமுடைய மக்களை நாடோடியாக வாழ்ந்த இனம் எப்படி தோற்கடித்திருக்க முடியுமென்று! எண்ணிப் பார்த்தால், நான் இந்த முடிவுக்குத்தான் வரவேண்டியவனாக இருக்கிறேன். உயர்ந்த வாழ்க்கை வசதிகளோடு. அச்சமற்ற நிலையில், அமைதியாக சிந்து சமவெளியில் வசித்த திராவிடர், எதிரிகள் பயமில்லாததால் படிப்படியாகப் போர்த் தொழிலை மறந்திருக்க வேண்டும். இப்படி வாழ்ந்தவர்கள் திடீரென்று சாரி சாரியாக எதிர்பாராமல் வந்த அன்னியர்களின் எண்ணிக்கையையும் பலத்தையும் எதிர்க்க முடியாமல் தெற்கே பின்வாங்கி வந்திருக்க வேண்டும். இது—வெறும் அனுமானமே!

இப்படிக் கங்கைக் கரையிலும் சிந்து சமவெளியிலும் கி. மு. 1500-ல் குடியேறிய ஆரியர், ஏன் தென்னகத்தில் வந்து குடியேறவில்லையென்பது ஒரு பிரச்சினை. கி. மு. 1500-ல் தென்னகத்தில் தமிழர்கள் சிறப்புற ஆட்சிசெய்தார்கள் என்பதற்கு தமிழிலக்கியச் சான்றுண்டு. அகத்தியரும் அவர்தம் பன்னிரு மாணாக்கர்களில் ஒருவருமான தொல்காப்பியர் 5000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்திருக்கவேண்டுமென்று அனுமானிக்கப்படுகிறது. இடைச் சங்கம் (தமிழ்ச் சங்கம்)— அதாவது இரண்டாவது சங்க காலம்— அகத்தியருடைய காலமென்று நம்பப்படுகிறது. இரண்டாவது சங்கம் கி. மு. எட்டாம் நூற்றாண்டில் இருந்ததென்றும்— அப்பொழுதுதான் அகத்தியர், தொல்காப்பியர், காப்பியனார், துவரைக்கோமான் போன்ற புலவர்கள் இடைச் சங்கத்தை அலங்கரித்தனர் என்றும் ஒரு கருத்துமுண்டு. முதற் சங்க காலத்திலேயே ஒரு அகத்தியர் வாழ்ந்தாரென்றும் அவரே அகத்தியம் என்ற நூலை அருளினார் என்றும் சிலர் கூறுவர். எப்படியிருப்பினும் தொல்காப்பியம் இன்றைக்கு சற்றேறக் குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்பதில் கருத்து வேறுபாடில்லை. மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் தொல்காப்பியம் என்ற உயர்ந்த இலக்கண நூல் தோன்றவேண்டுமானால், தமிழ் மொழியில் எத்தனை காலத்திற்கு முன் சிறந்த இலக்கியங்கள் அரும்பியிருக்க வேண்டுமென்று சற்று எண்ணிப் பார். தவிர, தொல்காப்பியரும் சில இடங்களில் தனது கருத்தாகவும், கற்றறிந்தார் கூறுவர் என்று சில இடங்களிலும் கூறுகிறார். ஆகவே அவருக்கு முன்னரே தமிழில் இலக்கணம் வரையறுக்கப்பட்டிருந்தது என்பது புலனாகிறது. தொல்காப்பியத்தில் செய்யுளியலில் முதல் சூத்திரம் கீழ்க்கண்ட வரிகளோடு முடிவடைகிறது.

"நல்லிசைப் புலவர்
செய்யுளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத்
தனரே'

தனது நூலுக்குப் பிற புலவர்களின் நூற்கள் எவ்வளவு

[தொடர்ச்சி பக்கம்—6]

வெள்ளி 12—9—58 சென்னை

ஓட்டைப் படகு!

"பணம்! பணம்!!" என்று பிச்சைக்காரர்கள் நிலையிலே ஆட்சியாளர்கள் டாலர் துரைகளிடமும்; ஸ்டார்லிங் சீமான்களிடமும்; உலக பாங்கியிடமும் கையேந்திக் கொண்டிருக்கிறார்கள் இன்று!

ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கான தொகை யானையைக் கட்டித் தீனி போடுவதுபோல இருந்தாலும் அந்த யானைப்பசி எப்போதுதான் அடங்கும் என்பது தீராத பிரச்சினையாகி; பொது மக்கள் உள்ளங்களை யெல்லாம் குழப்பிக் கொண்டிருக்கிறது.

முன்பு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குசேல நாட்டின் பிரதிநிதியாக குபேரபுரியாம் அமெரிக்காவுக்குச் சென்று; அங்கே அவர்கள் உள்ளம் குளிர—தயவைப் பெற தாறுமாறுகப் பேசி பெருந்தோல்வியுடனும், சொந்த நாட்டிற்குப் பெருத்த அவமானத்துடனும் திரும்பி வந்தார். இப்போதும் அட்சய பாத்திரத்தைக் கையில் ஏந்திக் கொண்டு மொரார்ஜி தேசாய் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்!

அதே நேரத்தில் உள் நாட்டிலே இறக்குமதிக் கட்டுப்பாடு என்னும் பெயரில் வெளிநாட்டுச் செலாவணியைத் தேக்கி வைப்பதற்காக கெடுபிடிகள் பல தினம் தினமும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

—இப்படி யெல்லாம் இவர்கள் செய்து வரும் முயற்சி இரங்கத் தக்கதாக இருந்தாலும், உள் நாட்டுச் செலாவணியிலே அவர்கள் அனுமதிக்கும் கண்மூடித்தனமான கழிவுகளையும்; ஊழல்களையும் நோக்கும்போது; ஆட்சியாளர்களின் நிலை எள்ளி நகையாடுவதற்கு ஏற்றதொரு சம்பவமாகத்தான் இருக்கிறது!

பழமொழி ஒன்று சொல்லுவார்கள், "வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி பணத்தைச் சேமிப்பது" என்று!

ஆனால் பதவியிலிருப்போரின் போக்கைப் பார்த்தால், அவர்கள் வயிற்றையோ வாயையோ கட்டுவதாகத் தெரியவில்லை—வீண் வழியில் பணத்தைக் கொட்டுவதாகத்தான் தெரிகிறது.

சமீபத்தில் டெல்லி பாராளு மன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் ஒரு பிரிவு சமர்ப்பித்த அறிக்கையில்; பட்ஜெட்டின் தரம் வரவரக் குறைந்து வருவதாக முறையிட்டிருக்கிறது.

"அதிகச் செலவு—தேவையில்லாத சேமிப்பு—பாராளுமன்றத்தில் செலவு செய்ய அனுமதிக்கப்பட்ட தொகையை பயன்படுத்தாமல் விட்டது ஆகியவற்றின் மூலம் இந்தத் தரக்குறைவு தெளிவாகப் புலனாகிறது!"

—என்று அந்தக் குழு குறிப்பிடுகிறது.

மேலும்;

"1957-ம் ஆண்டு எப்ரல் முதல்தேதி வரையில் வசூல் செய்யப்படாமல் இருக்கிற 262 கோடி வருமான வரியை வசூலிக்காவிட்டால், இந்த அரசாங்கத்திற்குப் பெருத்த நஷ்டம்!"

—என்றும் எச்சரித்திருக்கிறது.

"பிரிவினையின்போது பாகிஸ்தான் இந்திய அரசாங்கத்திற்குத் தரவேண்டியது என்று நிச்சயப்படுத்தப் பட்டதும், சென்ற பத்து ஆண்டுகளாகத் தரப்படாமலும் இருப்பதுமான 300 கோடி ரூபாயை வசூலிப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும்!"

—என்றும் வேண்டிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பொதுக் கணக்குக் குழு, முதன் முறையாக மந்திரிகளும், உயர்தர அதிகாரிகளும் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருமான வரிச் சட்டத்தை வளைப்பதுபற்றி சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஒன்றல்ல; இரண்டல்ல; 262 கோடி ரூபாய்கள் வருமான வரியில் பாக்கி நிற்கிறது!

இப்படி வரி கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் யார்? ஏழைகளா? ஏதுமில்லாதவர்களா? இல்லை! இரும்புப் பெட்டியிலே பணத்தைத் துருப்பிடிக்க வைத்திருப்போர்-அடுக்கடுக்காய்த் தங்கப் பாளங்களையும், வைர மணிகளையும் அள்ளிக் குவிப்பவர்கள் தான் நியாயமாகத் தரவேண்டிய வரியைக் கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதை வசூலிக்க முடியாத கையாலாகாத நிலையிலே அரசாங்கம் சட்டத்தின்மீதுள்ள தூசியைக் கூடத் தட்டுவதற்கு நினைக்காமல் வாயைப் பிளந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. இதற்குப் பெயர்தான் ஏழைப் பங்காளரின் ஆட்சியாம்—எட்டு திக்கும் கொட்டு முழக்கோடு ஒலி பரப்பப்படும் சோஷலிச பாணியாம்—சொல்லுகிறார்கள் வெட்கமின்றி!

கையிலே திருவோட்டுடன் ஒவ்வொரு நிதியமைச்சரையும் வெளிநாட்டுக்கு அனுப்புவதில் வெட்கப்படாத இந்த அரசாங்கம் எப்படி லகானை இழுத்துப் பிடிக்காமல் குதிரைச் சவாரி செய்கிறது என்பதற்கு பீகாரில் நடைபெற்ற சம்பவம் ஒன்று உதாரணமாக விளங்குகிறது.

பஞ்சக் காடான பீகாரில், நாலரை கோடி ரூபாய் செலவில் 1200 குழாய்க் கிணறுகளைத் தோண்டினார்கள். அவற்றுள் 900 கிணறுகள் ஒன்றுக்குமே பயன்படவில்லையாம். இது பொதுமக்கள் மத்தியில் மகத்தான பரபரப்பை ஏற்படுத்தி, அதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டுகளில் முதன் முறையாக பொதுமக்கள் கோரிக்கைக்கு செவி சாய்த்து பீகார் அரசாங்கம் ஒரு ஆய்வுக் குழுவை நியமித்தது.

அந்தக் குழுவினர் தந்திருக்கும் அறிக்கை பொதுமக்கள் வரிப் பணம் எப்படியெல்லாம் பாழாகிறது என்பதற்கு தக்கதொரு எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது.

அது சம்மந்தப்பட்ட அதிகாரிகள் 85,000 ரூபாய் எப்படி செலவாயிற்று என்பதற்குச் சரியான கணக்கு விபரங்களையே கொடுக்கவில்லையாம்! சம்பந்தப்பட்ட நிர்வாகச் செலவுகள் அனைத்தும் பிரமிக்கத் தக்க அளவுக்கு அதிகமாகவே இருக்கிறதாம்.

பல கிணறுகள் சரியான இடத்தில் தோண்டப்படவில்லையாம்! இரண்டு இடங்களில் கவனக் குறைவு காரணமாக தண்ணீர் உடைப்பெடுத்து வழிந்து வீணாயிற்றாம்! அரசாங்க 'என்ஜினியர்கள்' சம்பந்தப்பட்ட 'கண்ட்ராக்டர்கள்' ஆட்டி வைக்கும் கைப்பாவைகளாகவே இருந்திருக்கின்றனர்!

குழுவினர் கூறியிருக்கும் முடிவு திடுக்கிடத் தக்கதாக இருக்கிறது. அவர்கள் அறிக்கையின்படி செலவழிக்கப்பட்ட நாலரை கோடி ரூபாயில் சுமார் மூன்று கோடி ரூபாய் வீண் தெண்டமென்றும், அதில் ஒரு செப்புக் காசுகூட நல்ல பயன் என்ற வடிவில் குடியானவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்றும் அழுது புலம்பியிருக்கிறது.

அப்படியானால் அந்த மூன்று கோடி ரூபாயும் என்னவாயிற்று?

அதிகாரிகளைத் தவிர, வேறு பலரும் கலந்து இந்தப் பணத்தைக் கொள்ளையிட்டிருக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இப்படியெல்லாம் வரிப்பணம் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் பணப் பெருச்சாளிகள். ஏழை எளியவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக வசூலிக்கப்படுகிற வரிப்பணமோ பீகாரிலே நடந்தது போல் திரும்பவும் அந்தப் பண முதலைகளிடமே போய்ச் சேருகிறது!

ஓட்டையை அடைக்காமல் படகுப் பிரயாணம் செய்பவனைப் போல், இந்த நாட்டை ஆளுபவர்கள் ஊழல்களைத் துடைக்காமல் அன்னியச் செலாவணி கோரி அட்சயப் பாத்திரம் ஏந்துவதில் என்ன அறிவுடைமை இருக்கிறது?

பாட்டிமார்கள்கூடத் தெரிந்து வைத்திருக்கிறார்கள், வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மிச்சம் பிடித்தால்தான் சேமிக்க முடியுமென்று! இதைப் பதவியில் இருப்போர் உணர்ந்து கொள்ளாமல் வீண் படாடோபத்திற்கும், பண விரயத்திற்கும் பாக்கு வைத்துக் கொண்டிருந்தால், கஜானா காலியாகாமல் வேறென்ன ஆகும்? ஃ

சென்ற இதழில்....

மனம் கோணாது நடக்கும் மனைவியையும், மணமாகாத பருவமலரான மகளையும், தனிச்சையாய் வளர்த்துவிட்ட ஒரே மகனையும் விட்டுவிட்டு பொன்னையா கண்களை மூடி விடுகிறார். ஊர்க்காரர்களும், உறவினர்களும் கூட பொன்னையாவின் இறுதி யாத்திரை புறப்படுகிறது...

பூஞ்சோலையும், பொன்மணியும் துடித்துக் கதற, சுருளிமலை மௌனமாய்க் கண்ணீர்விட பொன்னையாவின் உடலுக்கு தீ மூட்டப்படுகிறது...

இடுகாட்டிலிருந்து திரும்புகிற நேரத்தில், பொன்மணியின் கல்யாணத்தைப் பற்றி ஊர் மக்கள் பேசிக் கொண்டு வருகின்றனர்...

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய கரகமாடிக் கண்ணன், தானே தான் பொன்மணியை மணக்க இருந்ததாகவும், பொன்னையாகூட தன்னை வற்புறுத்தியதாகவும் தெரிவிக்கிறான்.....கற்பூரத்தை மணம் செய்து கொள்ள வில்லையா என்று ஊரார் கேட்க, கண்ணன் தீச்சட்டி சிங்காரத்தின் குடும்பத்தைக்கேவலமாகப் பேசுகிறான்...

சிங்காரத்திற்குக் கோபம் வருகிறது. வார்த்தைகள் தடிக்கின்றன. கடைசியில் இருவரும் நடுத்தெருவில கட்டிப் புரள்கின்றனர். பொன்மணிக்காக கண்ணனும் சிங்காரமும் சண்டையிடுகிற நிலையைக் கண்டு அறவாழி திடுக்கிடுகிறான்.

அப்போது குறுக்கிடுகிற சுருளிமலை, கோயில்காளை சிவாவை அடக்குபவனுக்கே தன் அக்காள் உரியவள் என்ற நிபந்தனையை வெளியிடுகிறான்...

"அடக்குபவனுக்குப் பொன்மணி! தோற்று விட்டால் அவன் கரும்புள்ளி, செம்புள்ளி குத்திக் கொண்டு கழுதையின்மேல் ஊர்வலம் வர வேண்டும்!" என்று நிபந்தனையை அதிகப்படுத்துகிறான் சிங்காரம்....

கண்ணன் ஒப்புதல் தெரிவிக்கிறான்...

25

காதல் ஒரு வானவில் என்பார்கள். அதன் வர்ண ஜாலங்களைக் கண்டறிய முடியாது என்பார்கள். ஒரு சிலர் காதல் வற்றாத ஜீவ நதி யென்பர். வேறு சிலர், கைபட்டால் உடைந்துவிடும் கண்ணாடிதான் காதல் என விளக்கம் கூறுவர். காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோய் என்று செல்லமாகத் திட்டினார் திருவள்ளுவர். காதல் ஒருகடல்; அதற்குக் கரையே கிடையாது என்பவர்களும், காதல ஒரு அழுக்குக் குட்டை; கால் வைத்தால் சேற்றில் அமிழ்ந்து விட வேண்டும் என்பவர்களும் உலகத்தில் உண்டு.

காதலைப்பற்றித் தெளிவாகச் சொன்னவர்கள் யாருமேயில்லை. காதல் என்பது இன்னதுதான் என்று மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், முடிவாக "அது ஒரு குழப்பம்" என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் குழப்பத்திலே சிக்கி அப்போதுதான் விடுபட்ட அறவாழிக்கு மேலும் ஒரு பெருங் குழப்பம் ஏற்பட்டு விட்டது.

தன் காதலுக்கு எதிரியாகக் கரகமாடிக் கண்ணனும் ஆதரவாகத் தீச்சட்டி சிங்காரமும் இருப்பார்கள் என்றுதான் அவன் கடைசியாகக் கணக்குப் போட்டிருந்தான். இப்போது சிங்காரமும் எதிரியாகி விட்டது போல் அவனுக்குத் தோன்றியது.

ஊரார் தீர்ப்பின்படி இருவரில் ஒருவர் காளையை அடக்கி வெற்றி பெறுவார்கள். பொன்மணி அவர்களில் ஒருவனுக்குத்தான் சொந்தமாகி விடுவாள். இனித் தன் நிலைமை என்ன ஆவது? அறவாழியினால் பதில் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

பொன்மணியின் நிலைமையும் நெருக்கடியாகி விட்டது. ஆயினும் அவள் மனதில் மூண்ட வேதனையை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பொறுமையாக இருந்தாள். கற்பூரத்தின் உள்ளமோ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. கடைசியில் கண்ணன் தன்னை ஏமாற்றி விட்டானே யென்று ஏங்கினாள்.

வீட்டுக்குள்ளேயே அவளுக்கு இரண்டு மூன்று தடவை ஆவேசம் வந்து தானாகவே அடங்கி விட்டது. வெளியில் கிளம்பவே அவளுக்கு வெட்கம்! அண்ணன் சிங்காரமும் வீட்டுக்கு வருவதில்லை. அவன் வந்தாலும் அவன் முகத்தில் விழிப்பதற்கு அவளால முடியாது. அழுது அழுது முகமெல்லாம் வீங்கி விட்டது. இப்பொழுது அவளுடைய பிரார்த்தனை யெல்லாம் காளையை அடக்குவதில் சிங்காரம் வெற்றி பெற வேண்டுமென்பதுதான். அவன் வெற்றி பெற்றால் கண்ணன் பொன்மணியை இழந்து விடுவான். இறுதியில் அவன் தன்னை நாடித்தான் ஓடிவர வேண்டும். அப்போது அவனுக்குத் தகுந்த புத்திகள் கற்பித்துத் தன் அடிமையாக ஆக்கிக் கொள்ளலாம்.

இப்படி ஒரு ஆசை அவள் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த காரணத்தால்தான் அவளால் உயிரோடிருக்க முடிந்தது. சுருளிமலை, தன் நண்பன் சிவாவுக்கு மிகுந்த சிரமப்பட்டு சத்துள்ள ஆகாரங்களையெல்லாம் கொடுத்து வந்தான். காளையை இன்னும் வலுவுள்ளதாக ஆக்குவதற்கு என்னென்ன செய்ய முடியுமோ எல்லாம் செய்தான், சிங்காரமும், கண்ணனும் காளையை எதிர்ப்பதற்குத் தங்கள் உடலைத் தயார் படுத்திக் கொண்டிருந்தனர். இதற்குள் பொன்னையாவின் பதினாறும் நாள் நினைவு விழாவும் வந்து விட்டது. பூஞ்சோலை, அந்த நாளை சிக்கனமாகவே செய்து முடிக்க வேண்டியதாயிற்று.

கையிலிருந்த பொருளாதாரத்திற்குத் தக்கவாறு கணவனுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை அவள் நடத்தி வைத்தாள். பஞ்சாயத்தார் பரமசிவம் ஊரிலுள்ள முக்கியமானவர்களை மட்டும் கூட்டிக் கொண்டு பூஞ்சோலையைச் சந்தித்துப் பேசப் புறப்பட்டார். விதவைக் கோலமும் விழியிலே நீரும் கொண்ட பூஞ்சோலை, ஊர்ப் பிரமுகர்களின் வருகைக்கான காரணத்தை முதலில் புரிந்து கொள்ள முடியவில்லை. அவளிடம் சிங்காரம் கண்ணன் இருவரின் மனோநிலை விளக்கப்பட்டது.

"இருவருமே பொன்மணியைத் திருமணம் செய்து கொள்ளப் போட்டி போடுகிறார்கள். இதை இப்படியே விட்டுக் கொண்டேபோனால் திடீரெனப் பொன்மணியின் உயிருக்கோ, அல்லது கற்புக்கோ கூட ஆபத்து ஏற்படலாம். அதனால்தான் ஊரார் எல்லாம்கூடி சுருளிமலை சொன்ன நிபந்தனையின்படி இருவருக்கும் காளையடக்கும் போட்டியை உண்டாக்கித் தந்திருக்கிறோம்!" என்று பஞ்சாயத்தார் பூஞ்சோலையிடம் விபரம் கூறினார். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பொன்மணி குறுக்கே ஓடி வந்து, தனக்கு யாரையும் திருமணம் செய்து கொள்ளவே இஷ்டம் இல்லையென்றும் தனக்கு இப்போது திருமணமே தேவையில்லை என்றும் கூச்சல் போடத் துவங்கினாள். அவள் புலம்பல் எதுவும் ஊரார் உபதேசத்தின் முன்னே எடுபடவில்லை. இறுதியாக ஊராரை எதிர்க்க பூஞ்சோலையும் இஷ்டப்படாமல் அவர்கள் முடிவின்படியே விட்டு விட்டாள். அங்கேயே போட்டிக்கு நாள் குறிப்பிடப்பட்டது அந்தமாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று போட்டிக்குத் தேதி நிர்ணயித்தார்கள்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. பக்கத்து கிராமங்களுக்கும் எட்டியது. எங்கும் ஒரே பரபரப்பு!

"என்னடா இது; பழைய காலத்திலே கேள்விப்பட்டிருக்கிறோம்; யானையை அடக்கினான்-குதிரையை அடக்கினான்-பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான் என்று! இப்போது கண் எதிரேயே நடக்கப் போகிறதே!"—எனப் பேசி வியப்பி லாழ்ந்தார்கள் அனைவரும். அமைதியின்றித் தடுமாறிக் கொண்டிருந்த அறவாழியின் முன்னே சிங்காரம் வந்து நின்றான்.

"என்ன அறவாழி! நான் எதிர்பார்க்கும் நேரம் மிக சீக்கிரமே வரப்போகிறது!" என்றான்.

"ஏது? போட்டி நாள் தானே?" என்றான் அறவாழி.

"போட்டி மட்டுமல்ல! போட்டியிலே கண்ணன் தோற்பான். தோற்றதும் அவனுக்குக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையிலே ஊர்வலம் விடுவேன்.

விற்பனையாகிறது!

முத்தாரம்

இருபதாவது இதழ்

என் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விடுவேன்!"

"வாக்குறுதியை நிறைவேற்றுவது மட்டுமா? பொன்மணியுமல்லவா கிடைக்கப் போகிறாள்!"—அறவாழி, தன் வேதனையை மறைத்துக் கொண்டு பேசினான்.

"என் தந்தை எனக்கு ஏன் இப்படிக் கட்டளையிட்டார் என்பதை உனக்குச் சொல்ல வேண்டுமல்லவா? அதற்காகவே இங்கு வந்தேன்!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறினான் சிங்காரம். அவ்வளவு ஆத்திரம் அவனுக்கு அந்தக் கண்ணன் குடும்பத்தின்மீது!

"சொல்லுகிறேன் கேள்!" என்று அவன் மடமட வென்று பேச ஆரம்பித்தான்.

அறவாழிக்கு சிங்காரத்தின் கதையைக் கேட்க நேரமும் இல்லை; நினைப்பும் இல்லை. "இப்போது எனக்குக் கொஞ்சம் வேலை யிருக்கிறது" என்று சொல்லி அவனிடமிருந்துமெது வாக நழுவி விட்டான்.

சிங்காரத்திட மிருந்து விடுபட்ட அறவாழி, எதிரே சுருளி மலையைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

சுருளிமலையும் காளைப் போட்டியைப் பற்றியே அவனிடம் பேச ஆரம்பித்தான். அறவாழிக்கு அதைக் காது கொடுத்துக் கேட்க மனமில்லை. போட்டியில் தன் காளையின் உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பது சுருளிமலைக்குப் பெருங் கவலை. ஏன் திடீரென்று ஆத்திரத்தில் இப்படியொரு போட்டியைப் பற்றிச் சொன்னோம் என்று அவன் தனக்குள்ளாகவே மிகவும் வருத்தப் பட்டுக் கொண்டிருந்தான். தானும் கோயில் காளை சிவாவும் எப்படி சிநேகிதமானோம் என்பதை அறவாழியிடம் கூறவே அவன் வந்தான்.

அறவாழி அதை லட்சியம் செய்யாமல் அவனிடமிருந்து பிரிந்து சென்று விட்டான். அறவாழி, சிறிதும் சஞ்சலமின்றி நேரே பொன்மணி வீட்டுக்கே சென்றான். அங்கே பூஞ்சோலை மட்டுமே இருந்தாள். அவளிடம் பேசியதிலிருந்து பொன்மணி சந்தைக்குப் போயிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். தந்தை இறந்த பிறகு பொன்மணி அவனை சந்திக்கவே யில்லை.

சிங்காரம் — கண்ணன் தகராறுகளையும் காளைமாட்டுப் போட்டிச் செய்திகளையும் கேள்விப்பட்டு அறவாழி எவ்வளவு மனமுடைந்திருக்கிறாரோ; எப்படி அவரை சந்திப்பது என்று அவள் மனக்கிலேசம் கொண்டிருந்தாள். அதேபோல் எண்ணமிட்டிருந்த அறவாழியும் அவளைச் சந்திக்க விரும்பாமல் தான் இருந்தான்.

போட்டி நாள் நெருங்க நெருங்க அவனுக்குப் பொன்மணியைப் பார்த்து விடவேண்டும் போலிருந்தது. சந்தை கூடுமிடத்தை நோக்கிப் புறப்பட்டான். சந்தை முடிந்து மக்கள் வழியில் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அந்தி மயங்கும் வேளை...அறவாழி பொன்மணியின் வருகையை எதிர்பார்த்தவாறு போய்க் கொண்டே யிருந்தான். அவளும் பானைகளை விற்றுவிட்டு, வெறுங் கூடை யொன்றை மட்டும் தூக்கிக் கொண்டு எதிரே வந்தாள். இருவரும் சந்தித்தனர். ஒருவரோடொருவர் பேசாமல் நின்றனர். இருவர் கண்களிலும் நீர் விழ்ச்சியெனக் கண்ணீர் கொட்டியது.

பொன்மணி எதுவும் பேசாமல் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அறவாழியும் அவளோடு வந்து கொண்டே யிருந்தான். ஊர்க் கோடியில் உள்ள ஒரு பாழுங் கிணற்றினருகே வந்ததும் பொன்மணி நின்றாள். அவனும் நின்றான். அவள் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறு அவனையே பார்த்தாள். அதுவரையில் பேசாமல் வந்த அவள் அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் கூறினாள்.

"எதுவும் முழுகிப் போய் விடவில்லை......உங்கள் பொன்மணி உங்களைத் தவிர வேறு யாருக்கும் சொந்தமில்லை. இந்தப் பேச்சு தவறுமேயானால் என்னை எங்கும் தேடவேண்டாம்; இந்தக் கிணற்றுக்குள்ளேதான் கிடப்பேன்!" என்று கூறிவிட்டு அவன் பதில் சொல்வதைக் கேட்பதற்கு ஒரு விநாடி கூட நிற்காமல் மிக வேகமாக அதை விட்டு அகன்றாள்.

அறவாழி, அவள் போவதையே பார்த்துக் கொண்டு அப்படியே நின்றான். அவன் நிலைமை அவனுக்கே வேடிக்கையாக இருந்தது. அசைவற்று நின்று கொண்டிருந்த அவன் முதுகில் யாரோ ஓங்கித் தட்டவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பஞ்சாயத்தாரின் மகன் பைத்தியக்கார சிரஞ்சீவி இளித்துக் கொண்டே அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

"ஓ...உங்க ரெண்டு பேருக்கும் இப்படி நடக்குதா விஷயம்? இப்பவே போயி எங்கப்பா கிட்ட சொல்றேன் பாரு!" என்று கத்தினான்.

அறவாழிக்கு மேலும் வேதனை! பைத்தியம் அந்த இடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தது!

oooooooooooooooooooooooooo

மு. கருணாநிதி

செப்டம்பர் மாத நிகழ்ச்சிகள்

14—மாயவரம் பொதுக்கூட்டம்
15—மாயவரம்—திருமணம்
16—திருவாரூர் கூட்டம்
17—திருச்சி கூட்டம்
21—சென்னை—கூட்டம்
28—திருவொற்றியூர் — கூட்டம்

oooooooooooooooooooooooooo

சென்னை வானொலியில் ஞானசம்பந்தரின் "சைவம்"

★

மறைவாயிருந்த பிரதிகள் மறைந்த மாயமென்ன?

ஊழல்களின் உறைவிடமாகவும், நேர்மையின் சவக்காடாகவும் பாரத சர்க்காரின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது என்பதற்கு, அன்றாடம் ஏராளமான ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன!

இப்போது சென்னை வானொலி நிலயத்தில் திரை மறைவில் நடைபெற்று வந்த தில்லுமுல்லுகள்—திடுக்கிட வைக்கும் நடவடிக்கைகள் :சில வெளிவந்திருக்கின்றன. பொறுப்புள்ள பதவி வகிப்போர் அங்கே புரிந்து வந்த கேடுகெட்ட செயல்களை 'பிளிட்ஸ்' ஏடு எடுத்துக்காட்டுகிறது!

★ வானொலி நிலயத்தில் உள்ளவர்களே நாடகங்கள் எழுதி, அதை வேறு யாரோ எழுதியதைப்போல பலப் பல புனைப் பெயர்களில் ஒலிபரப்பி, அதற்குரிய 'ராயல்டி' தொகையை தாங்களே பெற்றுக்கொண்டது;

★★ தமிழ் நாடகங்களில் நடிக்க வருகின்ற பெண்களை தவறான வழிகளில் பயன்படுத்திக் கொண்டது;

★★★ வானொலி நிலயத்திலிருந்து சில நாடகங்களை தெரியாமல் அப்புறப்படுத்தி எடுத்துச் சென்றது;

—இப்படியாக அங்கே குற்றங்கள் நடைபெற்றதாம்!

இவைகளில், தமிழ் நாடக ஒலி பரப்புக்காக வரும் பெண்களோடு முறைகேடான விதத்தில் பழகினார் என்பதுதான் திரு அ. ச. ஞானசம்பந்தத்தின் மேலுள்ள குற்றச்சாட்டு! இந்த ஞானசம்பந்தம் சைவ சமயத் தீவிரவாதி—அறிவியக்க விரோதி!

நாடகப் பிரதிகள் திருட்டுப்போனது சம்பந்தமாக, சென்ற ஜூன் 25-ம் தேதியன்று சென்னை போலீசார் துப்பறியும் நாய்களின் உதவியை நாடினார்கள். அந்த நாய்கள் ஞானசம்பந்தத்தையும், அய்யாசாமி என்பவரையும் சுற்றிச் சுற்றி வந்ததாகக் கூறப்படுகிறது.

பெங்களூர் வானொலி நிலய அதிகாரியான நந்தி என்பவர் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்தி மேற்கண்டவை அனைத்தும் உண்மை என்றும் தெரியப்படுத்தி விட்டாராம்!

உங்கள் பார்வை

ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழக மாணவர்கள் விழிப்படைந்து விட்டனர் என்பதையும், மாணவர்கள்—எதிர்கால மன்னர்கள் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் ஆதரவு தருவார்கள் என்பதையும் அறிந்து கொள்ளவே இக்கடிதத்தை வரைகிறேன்.

வட நாட்டு ஏகாதிபத்தியத்தால் தென்னாட்டில் இந்திப் பிரச்சாரம் செய்ய "கலாச்சார தூது கோஷ்டி" என்ற போர்வையில் பலர் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரான பரிதாபத்திற்குரிய திருவாளர் "சுவாமி" சிவாச்சாரியும் ஒருவர் — முற்றும் துறந்த பற்றற்ற முனிவர்அவர். கோவை நகரில் பல பள்ளிகளுக்குச் சென்றார். சென்ற இடமெல்லாம் தமது அறியாமையை வெளிப்படுத்தி முக்காடு போட்டுத் திரும்பினார்.

அப்படி என்ன பேசினார்?

"பாரத மாதாவின் சுதந்திர புத்திரர்களே! உங்கள் தென்னாட்டில் பாரதமாதாவைத் துண்டு போடும் சில நாச சக்திகள்—பிரிவினை சக்திகள் வளருகின்றன. அது மிக மிகத் தவறு. வடநாடு தென்னாடு எல்லாம் ஒன்றுதான். நாமெல்லாம் பாரத மாதாவின் புதல்வர்கள். இப்பள்ளியில் எல்லோரும் ஆங்கிலம் படிக்கின்றனர் என்பதை அறிய வருந்துகிறேன். உலகத்திலேயே தொன்மையான மொழி வட மொழி (சமஸ்கிருதம்). ஆகவே ஆங்கிலத்தை விட்டுவிட வேண்டும். ஆரியர்கள் இந்நாட்டின் பூர்வ குடிகள். ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்பது பொய். சரித்திரத்தை நம்பக்கூடாது. தேசப் படத்தையும் நம்பக் கூடாது.

அவர் பேசி முடித்ததும் நமது மாணவர்கள் அவரது பேச்சில் புகுந்து கிடக்கிற முழுப் புளுகுகளை வார்த்தை வார்த்தையாக எடுத்துக் கொண்டு கேள்வி மாரி கிளப்பினர். எதிரே இருப்பவர்கள் ஏதுமறியா மாணவர்கள்—அவர்கள் நெஞ்சில் எதையும் பதித்து விடலாம் என்ற தவறான கணக்கிட்டுவிட்டு மனமறிந்து அபாண்டங்கள் சொல்லிய சுவாமியார் திடுக்கிட்டு விட்டார்.

கடைசியில் ஒன்றுமே பதில் சொல்ல இயலாது ஓடத் தலைப்பட்டார். மாணவர்கள் "முடியாது! சொல்லித்தான் ஆக வேண்டும்" என்றனர். கடைசியாக தலைமை ஆசிரியர் வந்து நிலைமையைச் சீர்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சி கோவை நகர நகராளுமன்ற உயர்நிலைப்பள்ளியில் நடந்தது!

இப்படிக்கு,
வீ. இராமசாமி
கோவை.

தேம்புகிறார்; தேச பக்தர்!

முதுகெலும்பைக் கதிர் அரிவாள்போல் வளைத்து-மூச்சுக்கு மூச்சு எரிமலையை உவமையாக்கி—இரத்தத்தை வியர்வையாகப் பாய்ச்சிப பாடுபடுகிறான் பாட்டாளி!

—ஆனால் ஆண்டு முடிவிலோ குடை நிழலில் தசை நோகாமல் வாழுகின்ற 'ஆண்டை' விளைவை அறுத்துச் செல்கிறான்!

உழவனுக்கு உடல்தான் மிஞ்சுகிறது—அதுவும் பசியாலும் பட்டினியாலும் பழுதுபட்ட நிலையில்!

சுழலுக்கும் சுறாவுக்கும் அஞ்சாமல்—கயல்விழி மாதரைக் கரையிலே நிறுத்தி விட்டு—குமிழ்ச் சிரிப்பு காட்டும் குழந்தையின் கன்னத்தில் கடைசி முத்தத்தைப் பதித்து விட்டு—'திரும்பி வருவோமோ; மாட்டோமோ' என்ற திகிலை நெஞ்சிலே பூட்டி — சாகசமாக இதழ்க் கடையிலே புன்சிரிப்பைக் காட்டி—கடல் கிழித்துத் தரை நோக்கிச் செல்லுகிறான்; தன் கண்ணாட்டியின் பல்லி முட்டைப் பற்களைப் போன்ற முத்துக்களைப் பொறுக்குவதற்கு! ஒரு கணம் அந்த உவமையை மனக் கண்ணால் சித்தரித்துப் பார்க்கவும் அவகாசமின்றி உயரே வருகிறான், உழைப்பதற்கே பிறவி எடுத்தவன்!

—ஆனால் மறுகணமே வேங்கையைப்போல் பாய்ந்து வெடுக்கென்று தட்டிப் பறிக்கிறது முதலாளியின் கரம்!

உழைத்தவனுக்கு உடல்தான் மிஞ்சுகிறது—அதுவும் நோயாலும் வறுமையாலும் தாக்கப்பட்ட நிலையில்!

இதே வருந்தத்தக்க நிலைதான் இன்றைய காங்கிரஸ் அரசியலிலும் ஏற்பட்டிருக்கிறது!

அன்றொரு நாள் இருட்டுச் சிறையிலும் ஈரத் தரையிலும் உழன்று தியாக முத்திரை பெற்றவர்கள், இன்று ஐந்து ஏக்கர் நிலத்தோடு கண்காணாத இடத்தில் நின்று—அக் கரம்பு நிலத்தில் எதைப் பயிரிடலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்!

அன்று வெள்ளைக்காரனுக்கு 'பூட்ஸ்' துடைத்தவர்கள் எல்லாம் வெண் புரவிப் பவனி வருகிறார்கள்!

அன்று யார் யார் காந்திக் குல்லாய் தரித்தவர்களை யெல்லாம் தேசத் துரோகிகள் என்று சுட்டிக் காட்டி—அவர்களது கைகளிலே காப்புமாட்டி—அவர்களது பெண்டு பிள்ளைகளைக் 'குய்யோ; முறையோ' என்று குமுற வைத்தார்களோ—அவர்கள் எல்லாம் இன்று கோலாகலமாக கொலுவீற்றிருக்கிறார்கள்!

இந்தக் குள்ள நரிகள்தான் அன்று வெள்ளைக்காரனுக்கு வால்பிடித்து, தாள் வணங்கித் தண்டனிட்டார்கள்! இன்று அதே பாடத்தைச் சிறிதும் பிழையின்றி அசோகச் சக்கரத்தின் நிழலிலே ஒண்டிக் கிடப்பவர்களின்பால் திருப்பிப் படிக்கிறார்கள்!

அதோடு மட்டுமல்ல; அதே பலனையே திரும்பவும் அடைகிறார்கள்!

இதை நாம் மட்டும் சொல்லவில்லை; பிறந்தது முதல் காங்கிரசிற்கே தொண்டு செய்து வாழ்ந்துவரும் சில முது பெரும் கிழவர்களும சொல்கிறார்கள்.

உதாரணமாக,

டெல்லியிலே வாழும் லாலா ஹனுவந்த சகாப் என்பவர்—எண்பது வயது நிரம்பப் பெற்ற அனுபவப் பழம் — 1898-ம் ஆண்டிலிருந்த இந்திய தேசிய இயக்கத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர்—பல ஆண்டு காலம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகப் பணியாற்றியவர்—அவர்தான் டெல்லி பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் கீழ்க் கண்டவாறு கூறினார்:

"நான் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட பதினைந்தாம் தேதியன்று சுதந்திர விழா கொண்டாட்டங்களைக் கண்டு களிப்பதற்காகச் செங்கோட்டை சென்று வந்திருக்கிறேன். நான் அதே மேடையிலே எங்களது (புரட்சிக்காரர்களது) ரகசிய இருப்பிடத்தைப் பற்றி அன்று உளவு கூறி, பிரிட்டிஷாரிடமிருந்து சன்மானம் பெற்ற பல 'பெரிய மனிதர்'களை அங்கே காணுகிறேன்...

"...இந்த அமைப்பு (காங்கிரஸ் கட்சி) அதி விரைவில் தனது இறுதிக் கட்டத்தை அடைந்து விடுமென்று நான் நம்புகிறேன்..."

—இப்படியெல்லாம் மனம் நொந்து அழுது புலம்பி யிருக்கிறார், இந்திய விடுதலைப் போரின் அந்தப் பழைய சிப்பாய்!

தேசத் தியாகிகள் அமர்ந்திருக்க வேண்டிய இடத்திலே துரோகிகள் அமர்ந்திருக்கிறார்களாம் — தேம்பி அழுகிறார் அந்தத் தொண்டுக் கிழவர்!

அவர் மேலும் கூறுகிறார்:

"தேச முன்னேற்றத்தை முழுதும் மறந்துவிட்டு அதிகார மது உட்கொண்ட இவர்களைப் பார்ப்பதற்கா உயிர் வாழ்கிறோம் என்று நினைக்கும்போது என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது..."

—அந்தப் பெருங் கிழவரின் இந்தப் பயங்கரக் குற்றச்சாட்டு, காங்கிரஸ் இயக்கத்தின் இன்றைய கேடுகெட்ட நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது!

'மூத்தவர் மனம் நொந்தால் குடும்பம் உருப்படாது' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள்!

காங்கிரஸ் குடும்பத்திலும் இன்று மூத்தவர்களின் முனகல் ஒலி திசை எங்கும் எழும்பிக் கொண்டிருக்கிறது; ஆகவே அதன் முடிவு அவலமாகத்தான் இருக்கும்! ஃ

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பயன்பட்டன என்பதை தொல்காப்பியர் மேற்கண்ட வரிகளில் குறிப்பிடுகிறார். ஆகவே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண அமைதி பெற்ற ஒரு மொழி—தமிழ்மொழி — தென்னாட்டில் இருந்ததென்றால் அம்மக்கள் எத்துணை நாகரிகம் பெற்றவர்களாக இருந்திருப்பர்? ஆரியர் வடநாட்டில் குடியேறியபொழுது, அதாவது கி. மு. 1500-ல் தென்னாட்டில் உயர்ந்த நாகரிகம் படைத்த தமிழ் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை நீ உணரவேண்டும்.

புறநானூற்றுச் செய்யுளொன்றில் சோழ மன்னனை வாழ்த்த எண்ணிய புலவர்,

"சிறக்க நின்னாயுண்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்கரிட்ட மணலினும் பலவே"

—என்கிறார்.

சிலப்பதிகாரத்தில்,

"மண்ணாள் வேந்தே நின்வாழ் நாட்கள்
தண்ணான் பொருனை மணலினும் சிறக்க"

—என்று சேர மன்னன் வாழ்த்தப்படுகிறான்.

புறநானூற்றுப் பாடல் மற்றொன்றில,

"எங்கோ வாழிய, குடுமிதங் கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த
முந்நீர் விழவி னெடியோய்
நந்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

—எனப் பாண்டிய மன்னன் வாழ்த்தப்படுகிறான்.

ஆற்று மணலின் எண்ணிக்கையினும் அதிக நாள் வாழ வேண்டுமென்று வாழ்த்திய புலவர்கள் சோழனை வாழ்த்துமிடத்து காவிரியையும்—சேரனை வாழ்த்துமிடத்து பொருனையையும் பொருத்தமாக எடுத்துக்கொண்டனர். பாண்டியனை வாழ்த்தும் பொழுது இல்லாத பஃறுளி ஆறு குறிப்பிடப்படுகிறது. இருக்கின்ற ஆற்றைக் குறிப்பிடுவதுதான் மரபாக இருக்க, ஒரு புலவர் மட்டும் இல்லாத ஆற்றைக் கூறி பாண்டியனை வாழ்த்த நியாயமில்லை. ஆகவே பஃறுளி ஆற்றைக் குறிப்பிடும் புலவர், அந்த ஆற்றினைக் கடல் கொள்ளுமுன் வாழ்ந்த புலவராக இருத்தல் வேண்டுமென்பதும், பஃறுளி ஆறும் குமரி ஆறும் ஓடியபொழுது பாண்டிய மன்னனொருவன் சிறப்புற ஆண்டான் என்பதையும் இதன் மூலம் நீ அறியலாம். வடக்கே வாழ்ந்த மக்களை விரட்டிய ஆரியர் தெற்கே வர முடியாமல் தமிழ் மன்னர்களே போரிட்டுத் தடுத்திருக்கவேண்டும். ஏனெனில் ஆடும் மாடும் ஓட்டிக்கொண்டு, அம்பையும் வில்லையுமே ஆயுதமாகத்தாங்கி, ஆரியர்கள் இந்தியாவின்மீது நாடோடிகளாய் படையெடுத்த பொழுது, வளமான இலக்கியம் கொண்ட மொழி பேசி, வகையான அரசியல்அமைத்து, தமிழ் மக்கள் தென்னகத்தில் வாழ்ந்தார்கள். விந்தியத்தின் காடுகள் ஆரியர்களைத் தென்னாட்டில் நுழையாமல் தடுத்திருக்கவேண்டு மென்பதைவிட நல்ல அரசியல் முறையோடு, வீரத்தை வேலியாகக்கொண்டு வாழ்ந்த தமிழரே அவர்களது படையெடுப்பைத் தடுத்திருக்க வேண்டும்.

சிந்து, கங்கைச் சமவெளியில் குடியேறிய ஆரியர், மக்கள் செய்யும் தொழிலை ஒட்டி அவர்களை நான்கு வருணங்களாகப் பிரித்தனர். வருணம் என்பதற்கு நிறம் என்ற ஒரு பொருளுண்டு. தங்களிடமிருந்து நிறத்தால் வேறுபட்ட திராவிடரைப் பிரித்துக் காட்டவும் ஆரியர்கள் இந்த முறையைக் கையாண்டிருக்கக்கூடும். போரிட்டு இனத்தைக் காப்போரை க்ஷத்திரியர் என்றும், விவசாயம்வியாபாரம் ஆகியவற்றைக் கவனிப்போர் வைசியர் என்றும் அழைக்கப்பட்டனர். மதச் சடங்குகளிலும் வேதம் கற்பதிலும் ஈடுபட்டோர் பிராமணர் என்று பெயர் பெற்றனர். இவர்களோடு சேராமல் கீழான வேலையில் ஈடுபடுத்தப்பட்ட தஸ்யுக்கள்—திராவிடர்கள்—சூத்திரர் என அழைக்கப்பட்டனர்.

இப்படி அமுலாக்கப்பட்ட சாதி பாகுபாடு நாளடைவில் நமது சமுதாயத்தில் எவ்வளவு பயங்கரமான தீமைகளைச் செய்தது என்பது நீ அறிந்ததே! நான்கு வருணம் நாலாயிரம் சாதியாயிற்று! வேற்றுமைகள் வளர்ந்து வேர்விட்டு நிலைத்தன; அவற்றின் கொடுமைகளைக் களைய புத்தர் முயன்றார்; தமிழகச் சித்தர்கள் முயன்றனர்; இராமலிங்க அடிகள் சாதி வெறியரைச் சழக்கரென சாபமிட்டார். ஆயினும் சாதிகள் அழிய மறுத்தன. மாதவி, நீயும் நானும் சார்ந்திருக்கும் சுயமரியாதை இயக்கமும், அதன் தந்தையான பெரியார் ராமசாமியுமே இச்சாதி ஒழிப்பில் கணிசமான அளவுக்கு வெற்றி கண்டவர்கள்.

பண்டைத் தமிழ்ச் சமுதாயம் சாதி யறியாச் சமுதாயம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்கிறது தமிழ் மறை. நம்முடைய நீதி நூல்கள்,

"சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்— மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி"

—எனப்பறை சாற்றுகின்றன. ஆயினும் தேர்தல் முதல் உத்தியோகத் தேர்வு ஈறாக சாதிகள் செய்யும் சாகசங்கள், அப்பப்பா......! ஏட்டில் எழுதத் தொலையாதவை!

தனி மனித வாழ்க்கையின் லட்சியம் மோட்சம் என்று ஆரியர் கருதினா. அதற்கு நான்கு நிலைகளை வரையறுத்தனர்.

திருமணமாகாத பிரம்மச்சரியம், மனைவியாளோடு கூடி வாழும் கிரஹஸ்தம், குடும்பப் பற்றற்று வாழும் வானப்பிரஸ்தம், காட்டில் சென்று தவமியற்றும் சந்நியாசம் — ஆகிய நான்கு நிலைகளே அவைகள்.

ஆரியர்கள் இந்தியாவில் தங்கள் கலாச்சாரத்தைப் பரப்பியபோதும், அதற்கு முன்பும் சீனாவில் சிறப்பான நாகரிகத்தோடு மக்கள் வாழ்ந்தார்கள். கடிதம் நீண்டுவிட்டது. புராதன சீன மக்களைப்பற்றி எனது அடுத்த முடங்கலில்! அதுவரை நான் எழுதியவற்றை சிந்தனை செய்.

உன் அன்புள்ள,

அகத்தியன்.

'மாதிரி சோஷலிச' அரசாங்கத்தின் 'மாதிரி அமைச்சர்' பாரீர்!

நாடாளும் காவலர்கள் நடமாடும் பல்கலைக் கழகங்களாக இருக்க வேண்டியவர்கள்!

அவர்கள் நடந்துவந்த பாதையிலே இரத்தப் பெருக்கோ—'ஐயோ, பாவம்' என்று ஆயிரமாயிரவர் அலறுகின்ற அவலக் குரலோ எழுவது கூடாது!

தூய்மையின் இருப்பிடமாகவும் — தோழமையின் சின்னமாகவும்—பண்பின் 'நாற்றங்காலா'கவும்—திகழ வேண்டியவர்கள் அவர்கள்!

பொது மக்கள் எண்ணம் எனும் 'எக்ஸ்-ரே' கருவியினால் அவர்கள் படம் பிடிக்கப்பட்டால், வைத்தியர் நிலையிலே இருப்போர் 'அவர்கள் எந்த நோயுக்கும் இலக்கல்ல' என்று பட்டயம் வழங்க வேண்டும்!

—ஜனநாயகம் தழைத்தோங்கும் மேலை நாடுகளிலே இன்றளவும் இதுதான் நிலைமை!

உதாரணமாக, பிரிட்டனிலே ஒருமுறை விவாகரத்து செய்து கொண்டவர்கள், பாராளுமன்ற உறுப்பினராவதென்பது அதிசயத்துக்குரிய செயல். அப்படித் தப்பிவந்தவர் அந்தோனி ஈடன்! அவர் எவ்வளவு சீக்கிரம் பொது மக்கள் செல்வாக்கை இழந்தார் என்பதை சரித்திரம் செதுக்கி வைத்திருக்கிறது.

அப்படி விவாகரத்து செய்து கொண்டவர்கள் 'பிரபு'ப் பட்டம் பெறுவது என்பதுகூட அங்கே ஆச்சரியத்துக்குரிய சம்பவம்தானாம்!

உதாரணமாக, ஷேக்ஸ்பியர் நாடகங்களை நடத்துவதில் இருபதாம் நூற்றாண்டில் இணையற்று விளங்குபவரும் — நடிகர்களுக்குள்ளே மன்னராகத் திகழ்பவருமான லாரன்ஸ் ஆலிவருக்கு 'சர்' பட்டம் வழங்கப்பட்டது. ஆனால், அவரோ ஒருமுறை விவாகரத்து செய்துவிட்டு, விவியன் லே என்ற நடிகையை மணந்தவர். அதனால் அவருக்கு 'சர்' பட்டம் கொடுப்பது தகுதியல்ல என்று பொருமியது பொது மக்கள் அபிப்பிராயம்!

அந்த அளவுக்கு அங்கே நாணயமும் நேர்மையும் பொது வாழ்வை அளந்து பார்க்கும் கருவிகளாகக் கருதப்படுகின்றன.

ஆனால் பண்பாட்டுக்குத் தொட்டில் என்று வேதங்களும் இதிகாசங்களும் புகழ்ந்து பாடும் இந்தப் பாரதத் திருநாட்டில்...?

வெட்கம் கலந்தவேதனைதான் விடையாகக் கிடைக்கிறது!

நேர்மை அற்றவர்களும், நாணயம் அற்றவர்களும்தான் இங்கு அடிக்கடி பதவிக்கு வர முடிகிறது என்பதைத் தவிர, பதவிக்கு வந்த பின்னும்கூட சிலர் அந்த இழிதகைப் பண்புகளை உதறி எறிந்ததாகத் தெரியவில்லை! மாறாக, அவர்கள் கடைப் பிடிக்கும் காட்டுமிராண்டிச் செயல்கள் பலவற்றுக்கு அவர்கள் வகிக்கும் பதவியே தக்கதோர் மறைவிடமாகப் பயன் படுத்தப்படுகிறது.

அதனால்தான் அதிகாரத்தைக் கேடயமாகக் கொண்டு, கேடுகள் பல புரிவதையே கேளிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்—மிகத் துணிவோடு மக்கள் மன்றத்தில் பவனியும் வந்து கொண்டிருக்கிறார்கள்!

லஞ்சம் வாங்குவது—உற்றார் உறவினர்களுக்கு உயர்ந்த உத்யோகங்கள் வாங்கித் தருவது —பணம் பெற்று 'பர்மிட்' பரிவர்த்தனை செய்வதுபோன்ற 'உயர்தர அட்டூழியங்களை' மட்டுமல்ல; அதைவிட பலவித ஈனத்தனமான, 'கீழ்த்தரமான அட்டூழியங்'களையும் செய்வதற்கு அவர்கள் இஞ்சித்தும் அஞ்சுவதில்லை!

இலட்சக் கணக்கில் அல்ல; நயா பைசா கணக்கில்கூட தங்களைத் தாழ்த்திக் கொண்டு தகாத செயல்கள் புரிவதில் நிகரற்று விளங்குவதிலே அவர்களுக்குள்ளே ஒரு போட்டி மனப்பான்மையே இப்போது வளர்ந்து வருகிறது.

“வாழ்க்கை வாழ்வதற்கே!” என்று ஒரு உபதேசம் உண்டு. கண்ணகியும் கோவலனும் பொழுது விடிவதற்குள் உலகம் அழிந்து விடுமோ என்று எண்ணி இன்பம் அனுபவித்தார்களாம்!

இன்று பதவிக்கு வந்திருப்பவர்களின் போக்கும் அப்படித்தான் இருக்கிறது! இனி ஒரு தடவை மந்திரி பதவி கிடைக்காது; அந்த நாற்காலி சாஸ்வதமல்ல — என்ற உண்மையை உணர்ந்து கொண்டு — பதவிக் காலத்திலேயே அகப்பட்டதைச் சுருட்டுவதில் தமது முழு நேரத்தையும், கவனத்தையும் செலவிட்டு அதிலே வெற்றியும் பெற்று வருகிறார்கள்.

இதற்கு ஒரு சமீபத்திய எடுத்துக்காட்டுதான் டெல்லியிலே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று!

ஒவ்வொரு அமைச்சருக்கும் அரசாங்கமே இனாமாக ஜாகை வசதி செய்து தருவது நமக்குத் தெரியும். மத்திய அமைச்சரவையிலே பதவி வகிக்கும் ஒரு கௌரவத்திற்குரிய அமைச்சர் இந்தச் சலுகையையும் லாபத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்!

அதாவது, அவருக்கு இனாமாகத் தரப்பட்ட வீட்டின் ஒரு பகுதியை ஒருவருக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்!

யாருக்கு?

பஞ்சாப் நேஷனல் பாங்கின் டெல்லி கிளையிலே பணியாற்றும் ஒரு 'கார் டிரைவ'ருக்கு!

எவ்வளவு வாடகைக்குத் தெரியுமா?

மாதம் இருபத்தி இரண்டு ரூபாய்க்கு!

மூன்றாண்டு காலமாக அந்த டிரைவர் கனம் அமைச்சருக்கு சரிவர—மிகவும் நாணயத்தோடு வாடகை கொடுத்து வந்தாராம்.

அந்த டிரைவருக்கு 'கஷ்ட காலம்' போலிருக்கிறது—அதனால் பாவம்; அவர் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்!

சம்சாரம்தான் சாகரமாயிற்றே; அதனால் பக்கத்திலிருந்த இன்னொரு அறையையும் சேர்த்து வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார், அவர்.

குடும்பம் என்றாலே தொல்லை என்றுதானே பொருள்; அதனால் அந்த 'மாஜி பிரம்மச்சாரி'க்கு குடும்பச் செலவு அதிகமாகிவிட; ஒழுங்காக வாடகை தரவில்லை.

இப்படி நிலைமை நீடித்தது!

பொறுப்பாரா, அமைச்சர்?

பதவி சதமல்லவே; அதற்குள் இனாமாகக் கிடைத்த ஜாகை வசதியின் முழுப் பலனையும் அடைந்துவிட வேண்டாமா? இந்த எண்ணம் மேலிட்டாலும்கூட காந்தியாரின் அகிம்சா வழியைப் பின்பற்றி அந்த 'கனம்' பலமுறை அன்போடும், விநயத்தோடும் வாடகைப் பாக்கியைக் கேட்டிருக்கிறார்.

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? பாவம்; அந்த ஏழை டிரைவரால் கொடுக்க முடியவில்லை!

உடனே, கனம் அமைச்சர் தேசப் பிதா காந்தியாரின் அகிம்சா வழி பலனளிக்காது என்பதைக் கண்டு கொண்டு—டயர் சகோதர்களின் அடக்குமுறை வழியை மேற்கொண்டிருக்கிறார். அதன் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்த ஆகஸ்ட் 15—ம் தேதி அன்றைய தினம்-டெல்லி மாநகரம் முழுவதும் தீபாலங்காரங்களால் ஜெக ஜோதியாய் காட்சி அளித்த மாலை நேரத்தில்—புதிதாக சம்சாரம் புகுந்த அந்த டிரைவரின் வீட்டுச் சாமான்களை எல்லாம் வெளியே தூக்கி எறிந்து விட்டார்!

அந்த திடீர் ஆக்ரமிப்புக்குப் பலியான டிரைவர் துக்ளக் சாலையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்திருக்கிறார்.

உடனே ஒரு போலீஸ் அதிகாரி கனம் அமைச்சரை சந்தித்து, “வாடகை தராவிட்டால் வழி காண கோர்ட் இருக்கிறது; இப்படிச் சாமான்களை வீசி எறிவது முறையல்ல!” என்று தாழ்மையாக வேண்டிக் கொண்டாராம். பிறகு அமைச்சர் மனமிளகி ஒரு முடிவுக்கு வந்தார்.

என்ன முடிவு அது?

'நாம்தான் கராச்சி தீர்மானத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு பை நிறைய சம்பளம் வாங்குகிறோமே; 'பாவம், இந்த ஏழை டிரைவர் என்ன செய்வான்? விட்டு விடுவோம் அவனை!' என்று வாடகையைத் தியாகம் செய்து விட்டாரா?

அதுதான் இல்லை!

கொஞ்சம் கொஞ்சமாக சில தவணைகளில் பழைய பாக்கியைத் தந்து விடுவது என்ற ஒப்பந்தத்தின் பேரில் மீண்டும் அவனை வீட்டிற்குள் நுழைய விட்டாரம்!

இது கற்பனையல்ல; கதையல்ல; 'கரண்டு' ஏடு தருகின்ற ருசிகரமான தகவல்!

நமது பாரத் வர்ஷத்தின் ஆட்சியைக் கையிலே வைத்திருப்பவர்கள் எத்தனை நேர்மையுடன் நடக்கிறார்கள் என்பதற்கு இதைவிட அத்தாட்சி வேறு வேண்டுமா?

இவரன்றோ 'மாதிரி சோஷலிச' அரசாங்கத்தின் 'மாதிரி மினிஸ்டர்'!

தூத்துக்குடி தந்த தங்கம்; பகுத்தறிவுச் சிங்கம்; தொழிலாளர் தலைவன்; தன்மான வீரன்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் தொண்டன்

கே.வி.கே.சாமி நினைவுமலர்

செப்டம்பர் 20-ம் நாள் வெளிவருகிறது.

அழகான வண்ண முகப்பு விலை 25 காசு

[முன்பணத்துடன் ஏஜண்டு தோழர்கள் தேவையான பிரதிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.]

மக்கள் மன்றம்,
15, பள்ளித் தெரு, சென்னை—2

பாரதி சின்னப் பயல்!

[முதல் பக்கத் தொடர்ச்சி]

ஆனால்—அந்தோ பரிதாபம்; அவர்களை யெல்லாம் பார்த்து பாரதியார்,

"கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி,
நாட்டத்திற் கொள்ளாரடீ!—
கிளியே!
நாளில் மறப்பாரடி!"

—என்று கூறுகிறார். வாய் விட்டுச் சிரிக்கிறார். சிரிப்பைத் தொடர்ந்து பாரதியின் விழிகளிலே யிருந்து கண்ணீர் முத்துக்கள் சிந்துகின்றன.

இலங்கையின் நிலையை எண்ணுகிறார். லட்சோப லட்சம் தமிழர்கள் அங்கே வதைபடுவதைக் காண்கிறார் — அவர்கள் உயிர் பறிக்கப்படுகிறது — உடமை அழிக்கப்படுகிறது— குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள் — கற்பு சூறையாடப் படுகிறது — ஓட ஓட விரட்டப் படுகிறார்கள் — நாடற்றவர்களாய்த் தேம்பி அழுகிறார்கள். அவர்களுக்குக் கை கொடுக்கத் தமிழ்நாட்டு ஆட்சியாளருக்குக் கருணை பிறக்கவில்லை. நமது இனத்தவர்—நமது ரத்த பாசத்துக்குரியவர் — இலங்கையில் சுடுமணற் புழுக்களாய்த் தவிக்கிறார்கள். ஏனென்று கேட்க நாதியில்லை! பாரதி தனது பழைய பாட்டைத் திரும்பப் பாடுகிறார். அது பாரதி விழா நடைபெறும் இடங்களில் எல்லாம் எதிரொலிக்கிறது. ஆளவந்தார் தலைகுனிகிறார்கள்.

"சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடீ—கிளியே!
செம்மை மறந்தாரடீ!"

—பாரதி அழுகிறார். அவர் முகம் மங்குகிறது. அவர் கண்களில் ஒளியில்லை. மீசையில் முறுக்கில்லை. ஒரே வேதனை! சோகம்! முணுமுணுப்பு கிளம்புகிறது!

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி
—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி!"

—பாடிக்கொண்டே நடக்கிறார். அவரது பாடல்களை மறந்துவிட்டு அவரை மட்டும் புகழ்கிறவர்களை அவரால் சகிக்க முடியவில்லை.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!"

—என்று அவர் பாடினார். இன்றோ இந்த நாட்டுக்குத் தமிழ்நாடு எனப் பெயரிடவும் மறுக்கிற தமிழர்கள் (?) அரசு கட்டிலில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாய் கூசாமல் பாரதியைப் பாராட்டவும் செய்கிறார்கள். வேதனை! வேதனை! விசித்திரமான வேதனை நண்பா இது!

பாரதியாரைப் பாராட்டிக் கொண்டே அவர் கூறியவற்றைக் காற்றில் பறக்க விடுவோர் ஒரு பக்கம்—பாரதியார் ஒரு பார்ப்பனர்; ஆகவே அவர் கவிஞரல்ல; அவரைப் பாராட்டுவது தகாது—என எழுதிக் குவிப்போர் மற்றொரு பக்கம்! இந்த இரண்டு கூட்டத்துக்கு மிடையே நின்று "என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம்?" என பரணி பாடிக் கொண்டிருக்கும் நாம்!

பாரதி, பார்ப்பனர் — ஆகவே அவர் பிற்போக்குவாதி என்று வாதம் எழுப்புவோர் ஒன்றை உணர வேண்டும்.

பாரதி, வ. ரா. போன்றவர்கள் பார்ப்பனீயத்தைத் தீவிரமாகக் கண்டித்த பெருமக்களாவார்கள். தமிழை வளர்த்தவர்களாவார்கள். இதோ, பாரதியைக் கண்டிக்கும் பெருந்தகையாளர்களின் பெருமதிப்புக்குரிய கவிஞர் பாரதிதாசன், பாரதியார் குறித்துப் பாடிய கவிதையின் ஒரு சில வரிகளை மட்டும் படித்துப் பார்:

"பகைநடுங்கச் செய்த பாரதி
பாட்டை நீ
பாராட்டு மறவனே!
நகைக்கத்தக்க நால்வகைச்
சாதியாம்
நச்சுப்பாம்பை நசுக்கிடச்
சொன்னால்
மிகுத்திட வேண்டும் மனுக்
கொள்கை என்று
வீறுப்புப் பேசி வெளிவரும்
அந்தப்
பகைநடுங்கச் செய்த பாரதி
பாட்டை நீ
பாராட்டு மறவனே!"

விசித்திரமான முரண்பாடுகள்! விசித்திரமான சூழ்நிலைகள்! விநோதமான கட்சிகள்! வேடிக்கையான மனிதர்கள்! அனைத்தையும் கூட்டிக் கழித்தால் மிச்சமாவது வெறும் வேதனைதான்!

"நெஞ்சு பொறுக்குதில்லை—
இந்த நிலைகெட்ட
மனிதரை நினைத்துவிட்டால்"

—என்ற வரிகள்தான் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

நீ நினைவு வைத்துக்கொள் தோழனே; நம்மைப் போலவே பாரதி எதிர்ப்பினிடையே வளர்ந்தவர். அவர் மாண்டு மடிந்த பிறகும் அவரை எதிரிகள் விடுவதாயில்லை. உயிரோடிருக்கும்போது ஆட்சியாளரின் எதிர்ப்பு! அடக்கு முறையின் எதிர்ப்பு! சொந்தக் கட்சிக்காரர்களின் எதிர்ப்பு! வறுமையின் கொடுமை! இத்தனையும் சமாளித்து எழுந்தவைகளே அவரது கவிதைகள்!

பாரதி மாணவனாயிருக்கும் போதே சுற்றியிருக்கும் நண்பர்களின் பொறாமைத் தீ எதிர்ப்பாக வளர்ந்து பாரதியை வளைத்ததாம்!

காந்திமதிநாதன் என்ற ஒரு உயர் வகுப்பு மாணவர், பாரதி மாணவப் பருவத்திலேயே பாட்டெழுதும் ஆற்றல் பெற்றிருப்பது கண்டு புழுங்கி—அவரிடம் நெருங்கி —"பாரதி சின்னப் பயல்!" என ஈற்றடியில் முடிவாக வைத்து ஒரு வெண்பா பாட முடியுமா எனப் போட்டிக்கழைத்தாராம்.

உடனே மாணவர் சுப்பிரமணிய பாரதி, "ஓ, பாடுகிறேன்" எனக் கூறி,

"காரதுபோல் நெஞ்சிருண்ட
காந்திமதி நாதனைப்
பார் அதிசின்னப் பயல்!"

என்று பாடி முடித்தாராம்.

பாரதியை சின்னப் பயலாக்க முயன்றார் காந்திமதிநாதன். பாரதியோ காந்திமதிநாதனையே "பார் அதிசின்னப் பயல்!" என மற்றவருக்குச் சுட்டிக் காட்டினார்!

தன்மீது வீசப்பட்ட கணையாலேயே எதிரியை வீழ்த்தும் வலிமையை, பாரதி மாணவப் பருவத்திலேயே பெற்றிருந்தார் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு! அவர் இளமையில் பெற்றிருந்த அந்த வலிவை என்றென்றும் அழியாத வலிமையாக அவரது கவிதைகள் பெற்றிருக்கின்றன.

சுப்பிரமணிய பாரதியார் என்றால்—சற்று நீண்ட முகமும்—பெரிய மீசையும்—அகன்ற விழிகளும்—அழகான தலைப்பாகையும் — கருநீலக் கோட்டும் அணிந்த ஒரு உருவம் அல்ல! அவரல்ல பாரதி!

இதோ இவர்தான் பாரதி—

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழி வுற்றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந் தெனை அழித்திட்
டாலும்;
"சுதந்திர தேவி"! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!

●

"உண்மையின் பேர் தெய்வம்
என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்
யெனக் கண்டோம்.
உண்மைகள் வேதங்கள் என்
போம்—பிறிது
உள்ள மறைகள் கதையெனக்
கண்டோம்.
நதியினுள்ளே முழுகிப் போய்—
அந்த
நாகர் உலகிலோர் பாம்பின்
மகளை
விதியுறவே மணம் செய்த—
திறல்
வீமனும் கற்பனை என்பது
கண்டோம்.

●

சூத்திரனுக்கொரு நீதி-தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு
வேறொரு நீதி;
சாத்திரம் சொல்லிடுமாயின்—
அது
சாத்திரம் அன்று சதியென்று
கண்டோம்."

இந்த எழுச்சிக் கவிதைகளின் வடிவம்தான் பாரதி!

அந்தப் பாரதி வாழ்க !

அவன் விழாக் கொண்டாடுவோர் அனைவரும் அவன் வழி நின்றிடும் உறுதியைப் பெறுக!

இதைத்தான் தமிழகம் பாரதி விழாச் செய்தியாகத் தந்திருக்கிறது.

பாரதியைப் பாராட்டிவிட்டு, அவர் பாடல்களைத் திருத்தியும், அழித்தும், புறக்கணித்தும், அவர் பெருமைக்கு மறைமுகமாக உலைவைப்போர் அவர் சீற்றத்திற்கு ஆளான காந்திமதிநாதன்களாகவே மதிக்கப் படுவர்! இது உண்மை! —உண்மை!!

அன்புள்ள,

நண்பன்

'நடிகவேளு'க்கு அர்ப்பணம்!

★

"ஆதலால்தான் இந்தப் பாரதி விழாவுக்காக சிவாஜி கணேசன், டி. கே. பகவதி, வி. கே. ராமசாமி, நடிகவேள் எம். ஆர். ராதா, ஏ. பி. நாகராஜன், டி. ஆர். ராமச்சந்திரன் — போன்ற பல சினிமா நட்சத்திரங்கள் முப்பது கார்களில் சென்னையை விட்டுப் புறப்பட்டு எட்டயபுரத்துக்கு ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர். மகாமகத்துக்குக் கூப்பிட்டாலும் இதேபோல் ஊர்வலமாக வருவார்கள்; மாநாடுகளுக்கு அழைத்தாலும் இத்தனை பேரும் வருவார்கள்! பாரதியாரைப்பற்றி இவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்?..."

பாரதிதாசனுக்கு அர்ப்பணம்!

★

"பாரதி என்பவர் யார்? கடைந்தெடுத்த புராணப் பிடுங்கல்! ஆரிய வெறியன்!...

"அமரகவி என்று கூறப்படும் பாரதியின் கொள்கை என்ன? அந்தக் காலத்தில் நாட்டுப் பற்றுடன் சுயராஜ்யம்—என்ற புனை சுருட்டுப் பெயரினால் தமிழில் நல்ல பாட்டாகப் பாடக் கூடிய புலவன் இல்லை. ஆதலால் காங்கிரஸ்காரர்களுக்குப் புதுச்சேரி இலுப்பைப்பூ ஜாவா சர்க்கரையாக இனித்திருக்கலாம்...

"பாரதியார் புரட்சிக் கவிஞர்; பாரதியார் பகுத்தறிவு வாதி என்றெல்லாம் பறைசாற்றுவது பெரும் ஏமாற்றுப் பிரச்சாரம் என்பதே நம் கருத்து..."

"விடுதலை" தலையங்கம் (10-9-58)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி" அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.